1983 பிப்ரவரி 12]

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : முடிவு எடுத்ததாக நான் அறிகிறேன் என்றுதான் சொன்னேன். அவர் கமிட் பண்ணியதாக நான் சொல்லவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முறையாக வந்தால் இப்படிப்பட்ட விவாதம் வராது, நல்ல பதில் வந்திருக்கும்.

திரு. இரெ. இராசமாணிக்கம் : தமிழகத்திலே ஓட்டல் பண்டங்களுடைய விலைகள் ஏராளமாக ஏறியிருக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதைப்பற்றி தனியாகக் கொடுங்கள். உங்கள் ஊரிலே நெல் விலையைக் குறைத்துவிடுங்கள், பண்டங்களின் விலையை குறைக்கச் சொல்லலாம்.

3. அறிவிப்புகள்.

(அ) ஆளுநரிடமிருந்து செய்தி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மேதகு ஆளுநர் அவர்களிடமிருந்து 10—2—1983 ஆம் தேதியிட்ட கீழ்க்காணும் செய்தி வரப்பெற்றது என்பதைப் பேரவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன் :

"I have received with satisfaction, your resolution thanking me for my Address on the 24th January 1983 to the Members of the Legislature''.

(முற்பகல் 10—40)

4. கவன ஈர்ப்புகள்.

(அ) அம்பிளிக்கை பயிற்சி நிலையத்தில் பயின்றவர்களை நர்சிங் கவுன்சில் பதிவு செய்ய மறுப்பது

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'' மதுரை மாவட்டம் அம்பிளிக்கை கிறித்துவ சமுதாய சுகாதார வழிகாட்டிகள் பயிற்சி நிலையத்தில் பயின்ற சுமார் 300 பேரை தமிழக நர்சிங் கவுன்சில் பதிய மறுப்பது குறித்த '' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

தமிழ்நாடு செவிலியர் மருத்துவத் தாதியர் மன்றம் ஒரு சட்ட பூர்வமான தனித்தியங்கும் அமைப்பாகும். இம்மன்றம், மற்றப் பணிகளுடன், அங்கிகரிக்கப்பட்ட பயிற்சிகளுக்கு பாடத்திட்டங்கள் வகுத்தல் செவிலியப் பணியினை ஒழுங்குபடுத்துதல்